பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 17 புதன்கிழமை 05.10.2022 கதிர் 221

## தேசிய பேரவையிலிருந்து ஜீவன் எம்.பியும் விலகல்



தேசிய பேரவையிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் ☞8

## லிட்ரோ எரிவாயுவின் புதிய விலை அறிவிப்பு




லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலைகுறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலையையும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோ லிட்ரோ எரிவாயு கொள்கலன் விலை 271 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 4 ஆயிரத்து 280 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 5 கிலோ லிட்ரோ எரிவாயு கொள்கலன் விலை 107 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,720 ரூபாவாகும்.

மேலும், 2.3 கிலோ ☞8

# முல்லைத்தீவில் பதற்றம்; மீனவர் குழுக்கள் மோதல்

## பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்





(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கடற்றொழிலாளர்களுக்கு எதிராக மற்றுமொரு ☞8

## கோபா தலைமைப் பதவி ஐக்கிய மக்கள் சக்திக்கு



ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில், கோபா எனப்படும் அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் நியமிக்கப்பட்டுள்ளார். கோபாகுழுவின் முதலாவது அமர்வு இன்று நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் இன்று நடைபெற்றது.

இதன்போதே தலைவர் பதவிக்கு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் நியமிக்கப்பட்டுள்ளார். கோபா மற்றும் கோப் குழுக் களுக்களின் தலைவர் பதவி களை எதிர்க் கட்சிக்கு வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சி யினர் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா பிரேரணை சவாலாக அமையாது!

### இலங்கை அரசு நம்பிக்கை

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கை மீதான புதிய பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது அரசுக்குச் சவாலாக அமையாது என்று நீதி, சிறைச்சாலைகள் ☞8

# வசந்த முதலிகேவையை சுட்டுக்கொல்ல முயற்சியா?

## நாடாளுமன்றில் அரசிடம் சஜித் கேள்வி



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே இரவு நேரங்களில் எதற்காக வெளியில் அழைத்துச் செல்லப்படுகின்றார்? அவரைச் சுட்டுப் படுகொலை செய்ய ☞8

## இலங்கை கூனிக்குறுகி நிற்க ராஜபக்ஷக்களே முழுக்காரணம்

### வாசுதேவ தெரிவிப்பு

ஜெனிவாவில் இலங்கை இன்று கூனிக்குறுகி நிற்க ராஜபக்சக்களே முழுக்காரணம்.

- இவ்வாறு அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான ☞8

## நிஷாந்தவுக்கு அழைப்பாணை



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ☞8

## அடக்குமுறையை நிறுத்துங்கள்; இல்லையேல் கவிழ்வது உறுதி

### அரசுக்குச் சாணக்கியன் எச்சரிக்கை



கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக அரசு செயற்பட்டால் அதன் பிரதிபலனை வெகுவிரைவில் அது அனுபவிக்கும். மக்கள் போராட்டத்தை முடக்க அரசு முறையற்ற வகையில் செயற்படுகின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். ☞2

## வெளிநாடுகளின் ஆதரவை முற்றாக இழக்கும் இலங்கை

### அரசைச் சாடுகின்றார் பீரிஸ்

இந்த ஆட்சி நீடித்தால் ஜெனிவாவில் இலங்கைக்கு 6 நாடுகள் மட்டுமல்ல எந்தவொரு நாடும் ஆதரவு வழங்க முன்வராது. சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பின்றி ☞8

## அம்பாறையிலுள்ள தமிழர்கள் அபிவிருத்தியில் புறக்கணிப்பு

### சபையில் கலையரசன் குற்றச்சாட்டு



அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் அபிவிருத்தி ரீதியிலான திட்டங்களின் போது திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்படுகிறார்கள். நாட்டில் எந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அங்கு தமிழ்ச் சமூகம் புறக்கணிக்கப்படுகின்றது. ☞2

## தெற்கு இளைஞர்களையும் அழிப்பதற்கு முயலாதீர்கள்

### சாணக்கியன் மீது 'மொட்டு' எம்.பி. பாய்ச்சல்

வடக்கில் தீ வைத்து தமிழ் இளைஞர் - யுவதிகளை அழித்தது போல் தெற்கிலும் தீ வைக்க முயற்சிக்க வேண்டாம். தெற்கு மாணவர்கள் அமைதியான முறையில் கல்வி கற்பதற்கு இடமளியுங்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பஸ்குவல் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய இரா.சாணக்கியன் எம்.பி., 'போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் - யுவதிகளை அடக்குவதற்கு அரசு அவர்களைப் பின் தொடர்கின்றது. கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக ☞2

# சர்வதேசத்திடம் நீதி தேடி அலைகின்றனர் தமிழ் மக்கள்

## தேசிய இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் என்று சந்திரிகா வலியுறுத்து



இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருப்பதால் தான் மூன்று தசாப்த காலங்கள் போர் நீடித்தது. இந்தக் கொடிய போரால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அதனால்தான் அவர்கள் இன்று சர்வதேசத்திடம் நீதி தேடி அலைகின்றார்கள். எனவே, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால்தான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு அனைவரும் ஓரணியில் ஒரே திசையில் பயணிக்க முடியும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டால் மாத்திரம் நாடு மீண்டெழாது. தேசிய இனப்பிரச்சினைக்கும் தீர்வு கண்டே ஆக வேண்டும். ☞8

## அடக்குமுறையை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதைத் தவிர்த்து விட்டு அரசு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகளைப் பின்தொடர்ந்து செல்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதற்காக மக்கள் அபிப்பிராயத்தைக் கோரும் வகையில் காங்கேசன்துறை தொடக்கம் தங்காலை வரை கையெழுத்துச் சேகரிப்பு பயணத்தை மேற்கொண்டோம். அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை எம்மால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மூன்று வேளை உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதற்குத் தீர்வு காண அரசு அவதானம் செலுத்தவில்லை.

மக்கள் போராட்டத்தை முடக்க அரசு முறையற்ற வகையில் செயற்படுகின்றது. அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரை அரசு முறையற்ற வகையில் நெருக்கடிக்குள்ளாக்குகின்றது. வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்களைத் தீவிரவாதிகள், அடிப்படைவாதிகள் எனக் குறிப்பிடுவது எந்தளவுக்கு நியாயம்?

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகப் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதன் உண்மைத்தன்மையை அரசு நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குமாறு பலமுறை வலியுறுத்துகின்றோம். 2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் முதலீடுகளைத் தடை செய்தார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தத் தடையை நீக்கினார். அடுத்த ஜனாதிபதி எவ்வாறு செயற்படுவார் என்பதை எம்மால் குறிப்பிட முடியாது.

நாட்டு மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் அரசு செயற்பட்டால் இந்த அரசும் அதிக நாட்கள் பதவியில் இருக்க முடியாது - என்றார்.

## தெற்கு இளைஞர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு செயற்பட்டால் அதன் பிரதிபலனை வெகுவிரைவில் அனுபவிக்கும்' என்று தெரிவித்த போதே குறுக்கிட்டு இவ்வாறு வேண்டுகோள் விடுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பி. அனுர பஸ்குவல் மேலும் பேசுகையில்,

மாணவர்களைத் தூண்டி விடும் வகையில் உரையாற்றி மாணவர்களைத் தவறாக வழிநடத்த வேண்டாம்.

வடக்கில் உசுப்பேற்றும் உரைகளை நிகழ்த்தி அங்கு வைத்து தமிழ் இளைஞர் - யுவதிகளை அழித்தது போல் தற்போது தெற்கில் தீ வைக்க முயற்சிக்க வேண்டாம்.

தெற்கு மாணவர்கள் அமைதியான முறையில் கல்வி கற்பதற்கு இடமளியுங்கள். அதனை விடுத்து மாணவர்களைத் தூண்டி விட்டு அவர்களின் எதிர்காலத்தை நாசமாக்க வேண்டாம்.

நீங்கள் கல்வி கற்கும் காலத்தில் போராட்டத்தில் ஈடுபடவில்லை.

மாணவர்களைச்சிறைக்குஅனுப்பும் வகையில் நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டாம். அதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களின் சந்ததியினர் வடக்கில் இதனையே செய்தார்கள் . மாணவர் போராட்டம் என்ற பெயரில் கடந்த காலங்களில் நாட்டில் தீவிரவாதச் செயற்பாடுகளே இடம்பெற்றன. எனவே, வடக்கு போல் தெற்குக்கும் தீ வைக்காதீர்கள் - என்றார்.

## அம்பாறையிலுள்ள..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அம்பாறை மாவட்டத்தில் குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படாத நீண்டகாலப் பிரச்சினையாகவே தொடர்கின்றது.

அலிகம்பை, கண்ணகி கிராமம் ஆகிய இடங்களில் வாழும் மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இப்பகுதியில் வாழும் மக்களுக்குத் தூய்மையான குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான திட்டம் 2017 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை அந்த அபிவிருத்தித் திட்டம் முழுமை பெறவும் இல்லை.

அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் அபிவிருத்தி ரீதியிலான திட்டங்களின் போது திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

அபிவிருத்திப் பணிகள் மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள நீர்த் தாங்கி புனரமைப்பு தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பும் போது நிதியில்லை என்ற பதில் மாத்திரமே வழங்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச பிரிவில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

குடிதண்ணீர் தொடர்பான பிரச்சினையை முன்வைக்கையில் இனரீதியிலான கருத்துக்களை நான் முன்வைக்கவில்லை. முன்னாள் நீர்வழங்கல் அமைச்சரின் நிர்வாக கட்டமைப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையே சுட்டிக்காட்டினேன்.

அலிகம்பை மற்றும் கண்ணகி கிராமம் ஆகிய இடங்களில் 70 சதவீதம் தமிழர்களும், 30 சதவீதம் முஸ்லிம்களும் வாழ்கின்றார்கள். இருப்பினும் இவ்விரு பகுதியிலும் குடிதண்ணீர் திட்டம் முழுமைப்படுத்தப்படவில்லை. ஆனால், தமிழர் குறைவாக வாழும் பகுதிகளில் குடிதண்ணீர் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நூறு சதவீத மளவில் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் எந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அங்கு தமிழ்ச் சமூகம் புறக்கணிக்கப்படுகின்றது. ஆகவே, அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம் - என்றார்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யார் தவறு இவை?

**அரசியல்வாதிகள் எல்லோரும் இப்போது தங்கள் வசதிக்கேற்ப 'மக்கள் ஆணை' பற்றித்தான் அதிகம் பேசுகிறார்கள்.**

**ஜனாதிபதிக்கும் ஆணையில்லை, அரசுக்கும் ஆணையில்லை, இப்போது அதிகாரத்தில் இருக்கும் நாடாளுமன்றத்துக்கும் ஆணையில்லை, மீண்டும் தேர்தல்களுக்குப் போய் மக்கள் ஆணை பெறுவது தான் ஒரே வழி என்கின்றார்கள் சிலர்.**

**மக்கள் வாக்குச்சீட்டு மூலம் கொடுத்த ஆணையை வைத்துக்கொண்டு, அதில் அரசியல் சித்து விளையாட்டுகளை நடத்தி, எல்லாவற்றையும் குழப்பி அடித்து விட்டு, இடையில் வந்து நின்று மக்கள் ஆணை இல்லை, புதிதாகத் தேர்தல் நடத்துங்கள் என்றால் என்ன செய்வது?**

**வருடா வருடம் தேர்தல் நடத்தி, இருக்கும் ஆணையை புதுப்பித்து அல்லது அங்கீகரித்து அல்லது மாற்றும் ஓர் ஏற்பாட்டைத்தான் நாட்டில் கொண்டு வர வேண்டும் போல.**

**அப்படிக் கொண்டு வந்த பின்னரும், மக்கள் தமது ஆணையைச் சரியான தரப்புகளைத் தேடிப் பார்த்து, உரசிச் சோதித்து, முன்னர் விட்ட தவறுகளை மீளாய்வு செய்து, ஒழுங்காக ஒப்படைப்பார்களா அல்லது அடுத்த வருடம் மீள் சோதனைக்கு இடையில் ஆணை தொலைந்து விட்டது என்று புதுத்தேர்தலுக்கு வழி தேடுவார்களா என்பதும் தெரியவில்லை.**

**இப்போது ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் தேர்வாகி இருப்பவர் ரணில் விக்கிரமசிங்க. அவருக்கு மக்கள் ஆணை என்று ஒன்று சட்ட, தார்மீக ரீதியாகக் கிடையாது என்று ஒரு தரப்பு கூறுகின்றது. கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்ட மக்களினால் அவர் நிராகரிக்கப்பட்டவர் என்பதால் அந்த மக்கள் ஆணை அவருக்குக் கிடையாதாம். அது சரி என்றே வைத்துக் கொள்வோம். அப்படிக் குற்றம் சுமத்துவோர், அந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றோருக் கும் மக்கள் ஆணை இல்லை என்று அடுத்த கதையை எடுத்து விடுகின்றார்கள். அப்படி என்றால் தேர்தல் என்பதும், அவற்றுக்கான முடிவுகள் என்பதும் வெறுமனே மக்கள் ஆணை நிராகரிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்தும் ஒன்றுதான், ஆணை பெற்றவர்களை அடையாளப்படுத்தும் விடயம் அல்ல என்று அவர்கள் நினைக்கின்றார்களா? ஒரே தேர்தலில் தோற்றவரையும் ஆணை இல்லாதவர் என்றும், மறுபுறத்தில் வென்றவரையும் ஆணை இல்லாதவர் என்று கூறுவது எங்ஙனம் சரி?**

**இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களுக்கு இடையில், ஜனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டால் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் மக்கள் ஆணையைப் பிரயோகிக்கின்ற பொறுப்பை, அந்த மக்களே தெரிவு செய்திருக்கும் நாடாளுமன்றத்திடம்தான் அரசமைப்புச் சட்டம் கொடுத்திருக்கின்றது.**

**இந்த நாட்டின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், பின்னர் ஜனாதிபதி பிரேமதாஸ உயிரிழந்த போது அவரது இடத்துக்கு டி.பி.விஜயதுங்கவும் ஜனாதிபதியாகத் தேர்வானமை அப்படித்தான்.**

**அந்த இரண்டு ஜனாதிபதிகளையும் அப்போது யாரும் மக்கள் ஆணையைப் பெறாதவர்கள் என்றோ, மக்கள் தங்கள் இறைமையைப் பிரயோகித்துத் தெரிவு செய்யாத ஜனாதிபதிகள் என்றோ அவர்களை விமர்சனம் செய்யவில்ல.**

**பொதுவில் பார்த்தால், இப்படி ஆணை பெறாதவர்கள் அதிகாரத்துக்கு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுவதற்கு, அத்தகைய ஆணையை வழங்குவது தொடர்பில், அதை வழங்குகின்ற மக்கள் இழைத்த பெரும் தவறே காரணம் என்பது கண்கூடாகத் தெரியும். அதற்கு சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளை வைது யாது பயன்? தவறு இழைத்த மக்களே, தங்களைத் தாங்கள்தான் வைய வேண்டும். இப்போதும் கூட அதுதான் சரி.**

# மக்காச்சோள இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம்!

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

மக்காச்சோள இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவில் இருந்து 2 லட்சத்து 25 ஆயிரம் மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இந்த அனுமதியின் கீழ் இலங்கைக்கு ஒரு லட்சம் மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான கையிருப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கால்நடை தீவன விலைகள் ஓரளவு குறையும் என அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் மக்காச்சோளத்தின் விலை அதிகமாக இருந்த போதிலும், இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், இறக்குமதி தாமதமாகி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத பொருள்களுடன் வவுனியாவில் ஒருவர் கைது!



வவுனியா ஈரட்டை பகுதியில் சட்டவிரோதமான முறையில் பொருள்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் ஈரப்பெரியகுளம் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து வத்தளைக்கு பயணம் செய்த கூளர் ரக ஹென்டர் வாகனத்தை திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் ஈரட்டை பகுதியில் வழிமறித்து சோதனை மேற் கொண்ட பொலிஸார் அந்த வாகனத்தில் இருந்து 3 ஆயிரத்து 800 கிலோ மஞ்சள் மற் றும் 250 மில்லிலீற்றர் விவசாய கிரு மிநாசினி மருந்து போத்தல் 519 என்பவற்றை சட்டவிரோதமாக கொண்டு சென்ற குற் றச்சாட்டில் ஈரட்டை பொலிஸார் கைப் பற்றி யுள்ளனர். குறித்த சட்டவிரோதமான பொருள் களை கொண்டு சென்ற நீர்கொழும்பை சேர்ந்த 43 வயது நபரை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில். கசிப்புடன் கைதான மாணவன்!

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை ஊரிப் பகுதியில் மூன்று லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட 15 வயதுடைய பாடசாலை மாணவனை, அச்சுவேலி பகுதியில் அமைந்துள்ள சான்று பெற்ற சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி மாணவன் 3 லிற்றர் கசிப்பு மற்றும் 16 லிற்றர் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் ஊர்காவற்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டான்.

கைது செய்யப்பட்ட சிறுவனை விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே சிறுவனை நன்னடத்தை பாடசாலையில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி வீதத்தை இல்லாதொழிப்பதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் குறுகிய கால வரி மறுசீரமைப்பு நாட்டு மக்களின் மத்திய கால மற்றும் நீண்ட கால நன்மைகளுக்கு வழி வகுக்கும். அத்துடன் சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி வீதத்தை இல்லாதொழிப்பதாக அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்ற போதிலும் அதில் எந்தவித உண்மையும் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்து தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் மக்களின் நலன்புரி செயற்திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படுத் தும் வகையில் எந்த ஆலோசனையையும் அந்த நிதியம் முன் வைக்கவில்லை.

பல்வேறு விமப் பிரசாரங்கள் முன்னெடுக்கப் பட்டு வந்த போதிலும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பான செயல்பாடுகளிலேயே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன் எமக்கு பல்வேறு சவால்கள் உள்ளன. மோசமான பொருளாதார நிலைமையை மீள கட்டியெழுப்ப வேண்டியது முக்கிய பொறுப்பு எமக்கு உள்ளது. அதற்கு வரி மறுசீரமைப்பு அவசியமானது.

அரசாங்கம் மாதாந்தம் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம் சமுர்த்தி உதவிகள் உள்ளிட்ட நலன்புரி விடயங்களுக்காக 12 கோடி டொலர்களை செலவிட்டு வருகிறது.

அதற்கான நிதியை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய வங்கி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. எனினும் அரசியல் லாபத்திற்காக மோசமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிரேஷ்ட பிரஜைகளுக்கான 15 வீத வட்டியை இல்லாது ஒழிக்க அரசு நடவடிக்கை எடுப்பதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

உண்மையில் தற்போது நடைமுறையில் உள்ள அதிக வட்டியை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே குறைந்த வட்டியான 15 வீதம் இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போகும் என்ற சிறந்த நோக்கத்துடனே அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

எனினும் அதனை சிலர் அரசியல் லாபத்துக்கான விமர்சனங்களாக முன்னெடுக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதித்துடனான இணக்கப்பாடு எப்போது எட்டப்படும் என கேள்விகள் எழுப் பப்படுகின்றன. இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் நாம் பேச்சு நடத்தி எமது திட்டத்தை நாம் சமர்ப் பிப்போம். அதன் பின்னரே அதற்கான இணக் கப்பாடு எட்டப்படும். எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அதற்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படும்.

ஜனாதிபதியும் மத்திய வங்கியும் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன் பல நாடுகளுடன் இராஜதந்திர ரீதியில் பேச்சு நடத்தி ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மேலும் 625 மில்லியன் டொலர் நிதி உதவி உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா தீர்மானம்

## இறுதிவரை உதவிகளை தொடர்வோம் என அறிவிப்பு



வொஷிங்டன், ஒக்.05

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஏழரை மாதங்களுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிற நிலையில், போரில் உக்ரைன் நாட்டு நகரங்களை ரஷ்யா படைகள் கைப்பற்றின. இதற்கிடையேபோரில்கைப்பற்றிய உக்ரைனின் நான்கு பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பதாக அறிவிக்கப்பட்டது. மேலும்ரஷ்ய படையிடம் இருந்து உக்ரைனின் முக்கிய நகரை உக்ரைனின் இராணுவம் மீட்டுள்ளது.

உக்ரைனில் நடந்துவரும் போரில் ரஷ்ய ஈராணுவத்துக்காக அதிக எண்ணிக்கையிலான வீரர்களை அணி திரட்ட உத்தர விடப்பட்டுள்ளது. இந்நிலையில், உக்ரைன்-ரஷ்யா போர் நிலைவரம் தொடர்பில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தொலைபேசி வாயி லாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியிடம் பேசினார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தத் தொலைபேசி உரையாடலில், நான்கு ஹிமார்ஸ் மல்டிபிள் ராக்கெட் லோஞ்சர்கள், வெடிமருந்துகள் மற்றும் கவச வாகனங்கள் உள்ளிட்ட கூடுதல் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை உள்ளடக்கிய புதிதாக 625மில்லியன்டொலர்அளவுக்குஉக்ரைனுக்கு இராணுவ உதவிசெய்யப்படும்என்று ஜெலனஸ்கியிடம் அமெரிக்க அதிபர் உறுதியளித்துள்ளார் எனவெள்ளைமாளிகைத்தகவல்தெரிவித்துள்ளது.

மேலும் ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து தற்காத்துக் கொள்ளும் வரை உக்ரைனுக்கு அமெரிக்கா தனது ஆதரவைத் தொடரும் என்றும், நான்கு உக்ரேனிய பிராந்தியங்களை ரஷ்யா இணைத்துக் கொண்டதாகக் கூறப்படுவதைஅமெரிக்காஒருபோதும்அங்கீகரிக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானில் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்திற்கு அமெரிக்க, இஸ்ரேல் சதியே பின்னணியாம்!

## அந்நாட்டுத் தலைவர் இப்படிக் குற்றச்சாட்டு




தெஹ்ரன், ஒக்.05

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காதான் ஈரானில் நடைபெறும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் மற்றும் அது தொடர்பான வன்முறைக்கு காரணம் என ஈரான் அதிபர் ரைசி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இஸ்லாமிய மத சட்டங்களை கடுமையாக பின்பற்றி வரும் ஈரானில் பெண்கள் மற்றும் 9 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அந்நாட்டின் தெஹ்ரானில் ஹிஜாப் சரியாக அணியவில்லை எனக் கூறிப் பொலிஸார்நடத்தியதாகக்கூறப்படும்தாக்குதலில் கோமா நிலைக்குச் சென்ற 22 வயதான மாஷா அமினி என்ற இளம்பெண் கடந்த மாதம்17 ஆம் திகதி உயிரிழந்தார். அந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர்.

ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் நாட்டின் பல நகரங்களுக்கு பரவிய நிலையில்போராட்டத்தை ஒடுக்க ஈரான் அரசு முயற்சித்து வருகிறது. ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் ஏற்பட்ட வன்முறையில் இதுவரை 133 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம் ஈரான் அரசு மற்றும் அதிபர் இப்ராகிம் ரைசிக்கு எதிராகத் திரும்பியுள்ளது. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவிகளும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக களமிறங்கி வருவதால் நிலைமையைஜ் கட்டுப்படுத்த முடியாமல் ஈரான் அரசு திணறி வருகிறது.

அதேவேளை, போராட்டக்காரர்களை சமாதானபடுத்தும் முயற்சியில் அதிபர் ரைசி இறங்கியுள்ளார். மேலும், இந்த போராட்டத்திற்கு வெளிநாட்டு சதிதான் காரணம் எனவும் அவர் கூறி வருகிறார். இந்நிலையில், ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம்குறித்து முதல் முறையாக பொது வெளியில் கருத்து தெரிவித்த அதிபர் இப்ராகிம் ரைசி, வன்முறைக்கு ஈரானின் எதிரி மற்றும் அதன் கூட்டாளிதான் காரணம்" எனத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தான் ஈரானில் நடைபெறும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் மற்றும் அது தொடர்பான வன்முறைக்குக் காரணம் என அதிபர் ரைசி குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பிரமாண்டமான இந்து கோவில் துபாயில் நேற்று திறந்துவைப்பு

## அனைத்து மதத்தவரும் செல்ல அனுமதி

துபாய், ஒக்.05

துபாயில் உள்ள ஜெபல் அலி பகுதியில் கட்டப்பட்டுள்ள துபாயின் பிரமாண்டமான புதிய இந்து கோவில் நேற்றைய தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த கோயில், ஏற்கெனவே அமைந்துள்ள சிந்தி குரு தர்பார் கோயிலின் விரிவாக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிந்தி குரு தர்பார் கோவில், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள பழமையான இந்துக் கோவில்களில் ஒன்றாகும்.

துபாயின் புதிய கோவிலின் அடித்தளம்பெப்ரவரி2020இல் நாட்டப்பட்டது. கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கு பின் பணிகள் நிறைவடைந்துள்ளன. திறப்பு விழாவுக்குப் பின்னர் இன்று முதல் பொதுமக்கள் பார்வைக்காக இந்த கோயில் அதிகாரப்பூர்வமாக திறக்கப்படும். இந்த கோவில்

அனைத்துமதத்தினரையும் மற்றும் வழிபாட்டாளர்கள் மற்றும்பிற பார்வையாளர்களுக்கு நுழைவதற்கும் அனுமதி அளித்துள்ளதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

தினசரி அடிப்படையில் சுமார் 1000 முதல் 1200 பக்தர்கள்வழிபாடுசெய்யலாம். துபாயின் இந்தப் புதிய இந்து கோவில் காலை 6:30 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும். கூட்ட நெரிசலை தவிர்க்கபார்வையாளர்களுக்கு கோவில் நிர்வாகம் கியூஆர் குறியீடு அடிப்படையிலான முன்பதிவு முறையை செயல்படுத்தியுள்ளது. ஜெபல் அலி பகுதியில் பல தேவாலயங்கள் மற்றும்சீக்கிய குருத்வாரா உள்ள நிலையில், துபாயின் புதிய இந்துக் கோவில் அமைக் கப்பட்டிருப்பதன் மூலம் துபா யில் வசிக்கும் இந்து மதத்தினரின் பல ஆண்டு கனவு நிறைவேறியுள்ளதாக பலர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# இரண்டு லட்சம் துருப்புகள் புதிதாக ரஷ்ய இராணுவத்தில் இணைவாம்!

மாஸ்கோ, ஒக்.05

உக்ரைனில் நடந்துவரும் போரில் ரஷ்ய இராணுவத்துக்காக அதிக எண்ணிக்கையிலான வீரர்களை அணி திரட்ட உத்தரவிடப்பட்டுள்ளதுடன், தாய்நாட்டுக்காகப் பொதுமக்கள் இராணுவத்தில் சேர வேண்டும் என்று கோரும்தீர்மானமும் கொண்டுவரப்பட்டுள்ளது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் செப்டம்பர் 21 அன்று இராணுவ அணிதிரட்டல் இயக்கத்தை அறிவித்தார்.

இந்நிலையில், அதிபர் விளாடிமிர் புடினின் அறிவிப்புக்கு எதிராக, ரஷ்யா முழுவதும் போராட்டம் நடந்து வருகிறது. ரஷ்யாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும்மக்களின்எண்ணிக்கையும்அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பலர் தங்கள் நாட்டை விட்டு வெளியேற முடிவெடுத்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது. ரஷ்யாவின் அண்டை நாடுகளான போலாந்து,

பின்லாந்து, உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் பிற மத்திய ஆசிய நாடுகளுக்கும் சுற்றுலா விசாக்களை பயன்படுத்தி ரஷ்ய நாட்டவர்கள் அதிகமானோர் செல்லத் தொடங்கியுள்ளனர்.

ரஷ்ய இராணுவத்துக்காக 3 லட்சம் பேரை இராணுவத்தில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ரஷ்ய அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ரஷ்ய பாதுகாப்புத் துறை மந்திரி செர்ஜி ரோய்கு நேற்றையதினம் விடுத்த செய்திக் குறிப்பில், 'அதிபர் விளாடிமிர் புடின் செப்டம்பர் 21 அன்று வெளியிட்ட இராணுவ அணிதிரட்டல் அறிவிப்புக்கு பின், இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ரஷ்ய இராணுவத்தில்

சேர்க்கப்பட்டுள்ளனர்.

80 பயிற்சி மைதானங்கள் மற்றும் ஆறு பயிற்சி மையங்களில் மக்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. முறையான பயிற்சி மற்றும் போர் ஒருங்கிணைப்புக்குப் பிறகு மட்டுமே மக்களை போர் மண்டலங்களுக்கு அனுப்ப முடியும். இராணுவ ஆட்சேர்ப்பு மையங்களுக்குவரும்தன்னார்வலர்களிடம்இராணுவத்தில் சேராமல் இருப்பதற்கான முக்கியமான காரணங்கள் இல்லாவிட்டால், அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்று தெரிவித்துள்ளார்.

# ஜெனிவாவில் நாளை வரும் பிரேரணையை இந்தியா ஆதரித்து வாக்களிக்க வேண்டும்!



## அன்புமணி ராமதாஸ் இப்படி வலியுறுத்து

இலங்கை போர்க்குற்றம் தொடர்பாக ஜெனிவாவின் அமெரிக்கா உட்பட்ட நாடுகள் கொண்டுவரும் பிரேரணையை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இது தொடர்பாகடாக்டர்அன்புமணிராமதாஸ்வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்த வரைவுப்பிரேரணையை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 10 நாடுகள் கொண்டு வந்துள்ளன. ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்பதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையில் குரல் கொடுத்த இந்தியா, ஈழத்தமிழர் படுகொலைகளுக்கு நீதி பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிக்க வேண்டும். அதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையில் நாளை ஒக்டோபர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பில், இலங்கை போர்க் குற்றம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்துள்ள பிரேரணையை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# 5ஜி சேவை இந்தியாவில் இன்று தொடங்குகின்றது




புதுடெல்லி,ஒக்.5

5 ஆம் தலைமுறை தொலைத் தொடர்பு சேவையான '5ஜி நெட்வொர்க்' இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பிரதமர் நரேந்திர மோடி இந்தச் சேவையைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிலையில் முகேஷ் அம்பானியின் ஜியோ நிறுவனம் தசரா பண்டிகையை முன்னிட்டு இந்தியாவின் 4 நகரங்களில் இன்று முதல் 5ஜி சேவையை அறிமுகப்படுத்துகிறது. மும்பை, டெல்லி, கொல்கத்தா மற்றும் வாரணாசியில் இன்று முதல் சோதனை அடிப்படையிலான 5ஜி சேவையை தொடங்கவுள்ளதாக ஜியோ அறிவித்துள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த 4 நகரங்களில் ஜியோவின் ட்ரு 5றூ பீட்டா சேவை, 1 ஜிபிபிஎஸ் வேகத்தில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 5ஜி சேவைகளைப் பெற புதிய சிம் தேவையில்லை எனவும் ஜியோ தெரிவித்துள்ளது.

# மெகபூபா வீட்டுச் சிறையில்; அமித்ஷா அங்கு சுற்றுலாவில்



ஸ்ரீநகர்,ஒக்.05

தான் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டுள்ளார் என காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முப்தி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை மந்திரி அமித்ா 3 நாள் பயணமாக ஜம்மு-காஷ்மீர் சென்றுள்ளார். அவர் நேற்று ரஜோரி மாவட்டத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்றார். இதனை தொடந்து ஜம்மு-காஷ்மீர் பாதுகாப்பு தொடர்பாக அதிகாரிகளுடன் அமித்ா இன்று ஆலோசனை நடத்தி வருகிறார். சுற்றுப்பயணத்தின் 2ஆம் நாளான இன்றுபாரமுல்லாமாவட்டத்தில்பொதுக்கூட்டத்தில் அமித்ஷா பங்கேற்கிறார்.

இந்நிலையில், தான் தொடர்ந்தும் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டுள்ளார் ஜம்மு-

காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முப்தி குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக மெகபூபா முப்தி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'அமைதி நிலை திரும்பிவிட்டது என உள்துறை மந்திரி தம்பட்டம் அடித்துவரும் நிலையில் பத்தன் பகுதியில் உள்ள எனது கட்சி தொண்டரில்இல்லதிருமணசெல்லநினைத்ததால் நான் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டுள்ளேன். முன்னாள் முதலமைச்சர் அடிப்படை உரிமை சுலபமாக ரத்து செய்யப்படும்போது, சாமானியர்களின் அவல நிலையை நினைத்துப்பார்க்க முடியவில்லை' என தெரிவித்துள்ளார்.




# பனிச்சரிவில் சிக்கிய பலர் உத்தர்காசியில் உயிரிழப்பு

உத்தரகாண்ட் மாநிலத்தில் பனிச்சரிவில் சிக்கி 12க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

உத்தரகாண்ட் மாநிலம் உத்தர்காசி மாவட்டத்தில் மலையேறுதல் பயிற்சிக்கான அரசு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தைச் சேர்ந்த 34 பயிற்சி மலையேறு வீரர்கள், 7 பயிற்சியாளர்கள் என மொத்தம் 41 பேர் இமயமலையின் திரவுபதிகா தண்டா-2 சிகரத்தில் இருந்து பயிற்சியை முடித்துக் கொண்டு முகாமிற்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அப்பகுதியில் பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் அவர்கள் அனைவரும் சிக்கிக் கொண்டனர். தகவலறிந்த இந்தோ-திபெத் எல்லைப் பாதுகாப்பு படையினர், தேசிய, மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் பனிச்சரிவில் சிக்கியவர்களை ஹெலிக்கொப்டர்கள் உதவியுடன் மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இதற்கிடையே, பனிச்சரிவில் சிக்கிய சிலர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், 10 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த துயர நிகழ்விற்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, காங் கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

# பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்ததில் உத்தரகாண்டில் 25 பேர் மரணம்



புதுடெல்லி,ஒக்.05

உத்தரகாண்டில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்ததில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பள்ளத்தாக்கில் இருந்து 21 பேரை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு இரங்கல் தெரி வித்துள்ளார். உத்தரகாண்ட், லால்தாங் பகுதியில் இருந்து பவுரி கர்வால் மாவட்டத்தில் உள்ள பிரோன்கால் பகுதிக்கு நேற்று பஸ் ஒன்று சென்றுகொண்டிருந்தது. பிரோன்காலில் நடைபெறும் திருமண விழாவில் பங்கேற்ப தற்காக ஐம்பதுக்கும் மேற்பட்டவர் அதில் பயணித்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையில், மலைப்பாங்கான பகுதியில் இரவு 7.30 மணியளவில் பஸ் சென்றுகொண்டிருந்த போது சிம்ரி என்ற இடத்தில் உள்ள வளைவில் திரும்பும்போது டிரைவரின் கட்டுப்பாடடை இழந்து பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் பஸ்ஸில் பயணித்த 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், பள்ளத்தாக்கில் இருந்து 21 பேரை மீட்புப்படையினர் மீட்டுள்ளனர்.

இதில் காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். மீட்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு நிகழ்வு








(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்தின் நல்லையா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவின் ஆரம்ப நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் வாக்லே கலந்துகொண்டமையுடன் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ந.பஞ்சநதமும் பங்கேற்றார்.

கிழக்குப்பல்கலைக்கழகம் அதன் 42 ஆவது ஆண்டினைப் பூர்த்தி செய்யும் வேளையில் இப்பட்டமளிப்பு விழா நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை வெளிவாரி மற்றும் உள்வாரியாக கல்வி நெறிகளைப்பூர்த்தி செய்துள்ள 2506 பேர் பட்டம் பெறுகின்றனர். கலாநிதி, முதுதத்துவமாணி, விவசாய, விஞ்ஞான முதுமாணி, முதுகலைமாணி, முதுகல்வி மாணி வணிக நிருவாகத்தில் முதுமாணி, அபிவிருத்திப் பொருளியல் முதுமாணி, முகாமைத்துவ பட்டப்படிப்பின் டிப்ளோமா மற்றும் இளமாணி உட்பட 1247 பேருக்கு முதல் நாள் பட்டம் வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் பட்டமளிப்பின் போது 1259 பே பட்டம் பெற்றனர். கிழக்குப்பல்கலைக்கழக வரலாற்றில் முதல்தடவையாக தொழில்நுட்பபீட மாணவர்களுக்கான விவசாய தொழில் நுட்பம் மற்றும் முயற்சியான்மையில் உயிர் முறைமைகள் தொழில் நுட்ப இளமாணி பட்டம் வழங்கப்பட்டது.

## கராத்தே முதன்மைப்போட்டியில் வாழைச்சேனை இந்து மாணவர்







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கைக்கான சர்வதேச தற்காப்புக் கலைச் சங்கம் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து சிறுவர் தினத்தில் நடத்திய போட்டியில் வாழைச்சேனை இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) யைச்சேர்ந்த 13 மாணாக்கர்கள் ஜப்பான் கராத்தே – தோசோட்டோகான் பயிற்சிக் கழகத்தின் (JKSSA) சார்பாக கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் காத்தா(ழுழிமிழி)மற்றும் சண்டை (Kumite) ஆகிய இரண்டு போட்டிகளிலும் கலந்துகொண்டு அதிகூடிய 18 பதக்கங்களை தம் வசப்படுத்திக்கொண்டனர்.

இதில், காத்தா மற்றும் சண்டை ஆகிய போட்டிகளில் கலந்துகொண்ட ந.நியோகிறிஸ்மன், ம.மனோஷ், பா.யுனித், சு.ம துர்ஷினி,சு.டென்சிக்கா ஆகியோர் எட்டு தங்கப்பதக்கங்களையும் ச.நோயல் நிதுன்,உ.கேசோபன், த.டிதுர்ன், றா.சிலோசிக்கா, சு.டென்சிக்கா ஆகியோர் ஆறு வெள்ளிப்பதக்கங்களையும் சு.அகோஸிதன், ந.நியோகிறிஸ்மன், ச.நோயல் நிதுன் அகிய வீரர்கள் நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இம்மாணவர்களை வாழைச்சேனைப் பிரதேசத்தைச்சேர்ந்த பயிற்றுவிப்பாளர் 'சென்சி'.த.சதானந்தகுமார் (ரங்கன்)பயிற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் இந்திய மாணவர்களும் கலந்துகொண்டுதமது திறமைகளை வெளிப்படுத்தியமையுடன், அவர்களையும் வெற்றிகொண்டு இந்தக்கல்லூரி மாணாக்கர்கள் சாதனை படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'நவீன சீதை' சிறுகதைகள் நூல் திருகோணமலையில் வெளியீடு




(ஹஸ்பர்)

கவிச்சுடர் சிவரமணியின் 'நவீன சீதை'சிறுகதை நூல் வெளியீட்டு விழா நேற்று முந்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட் போர் கூடத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் அதிதிகளாக பேராசிரியர் பாலசுகுமார், திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சி. சிறிதரன், அரசியல் ஆய்வாளர் ஆ. யதீந்திரா ஆகியோர்கலந்துசிறப்பித்தனர்.

நூலின் பிரதியினை நூலாசிரியர் கவிச்சுடர் சிவரமணி கிழக்கு மாகாண இலங்கை வங்கியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம் அவர்களுக்கு வழங்கி வெளியீட்டு வைத்தார். தொடர்ந்து அதிதிகளுக்கு நூலாசிரியராலும் நிகழ்வின் தலைமையினாலும் நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. நூலின் அறிமுக உரை நயவுரையினை கவிஞர் க. யோகானந்தன் ஆசிரியை செள. சந்திரகலா ஆகியோர் வழங்கினர்.வரவேற்புரையை ஊடகவியலாளர் பா. விபூஷிதன், நிகழ்ச்சி தொகுப்பை ஊடகவியலாளர் முகமட் புகாரியும், நன்றியுரையை நூலகர் க. வரதகுமாரும் வழங்கினர்.

## கிழக்கின் பிரதம செயலாளர் கடமைகளைப் பொறுப்பேற்பு



(பைசல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட ஆர்.எம்.பி. எஸ்.ரத்நாயக்க கடந்த திங்களன்று திருகோணமலை பிரதம செயலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதிப் பிரதம செயலாளர்கள், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செய லாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மாகாண ஆணையாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், உத்தி யோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மீண்டும் விவசாய நடவடிக்கைகளில் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள்!



இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வரையில் பெரும்போக விதைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.

விவசாய நடவடிக்கைகளுக்கான உள்ளீடுகளை அரசாங்கம் வழங்கும் வரையில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடுவதில்லையென மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் தீர்மானித்திருந்த நிலையில் ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சருடன் நடைபெற்ற பேச்சுகளைத் தொடர்ந்து வழங்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு அமைவாக இந்தத் தீர்மானத்தை விவசாயிகள் எடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கும் திணைக்கள தலைவர்களுக்குமான சந்திப்பு திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட விவசாய சங்கங்கள்,சம்மேளனங்களின் பிரதிநிதிகள்,கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் கி. ஜெகநாத், மாவட்ட விவசாய பணிப்பாளர்,நீர்பாசன திணைக்கள பணிப்பாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடல்கள் நடைபெற்றதுடன் விவசாய நடவடிக்கை காலத்தைத் தெரிவுசெய்தல்,உள்ளீடுகளைப்பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

உள்ளீடுகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் கிடைக்கவேண்டும் என்றும் 15 ஆம் திகதி விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கமுன்னர் விதைப்புக்கான உள்ளீடுகள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

விதைப்பு நடவடிக்கைகளுக்கான உள்ளீடுகளை அரசாங்கம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக இதன்போது அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

# பூநகரி பிரதேச கிராஞ்சி சிவபுர மீனவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!



சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சி சிவபுர மீனவர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடல் அட்டை பண்ணைகளால் சிறு மீன்பிடி கரையோர தொழிலாளர்கள் தமது தொழிலைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது இருப்பதாக தெரிவித்து கடந்த 4 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் தமது தொழிலுக்கு இடையூறாக கடல் கரையோரம் முழுவதும் சட்ட விரோதமாக பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் இவற்றை அரச அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை என்றும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு போராடி வந்த மீனவர்கள், உரிய தீர்வை பெற்றுத்தர முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்து யாழ்.மாவட்ட பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

## வாழைச்சேனையில் வீடு உடைத்து திருடிய சந்தேக நபர் போதைப் பொருளுடன் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள 4 வீடுகளை உடைத்து அங்கிருந்து 17 லச்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய 23 வயதுடைய இளைஞன் ஒருவரை ஹரோயின் போதைப் பொருளுடன் திங்கட்கிழமை கைது செய்துள்ளதாகவும் திருடப்பட்ட பொருள்களை மீட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள 4 வீடுகளில் பெறுமதியான பொருள்கள் தங்க ஆபரணங்கள் திருட்டு போயுள்ளன என முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் நாவலடி பிரதேசத்தில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்து றைஸ்குக்கர் ஒன்று, தங்க ஆபரணமும். பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் தொலைக்காட்சி பெட்டி ஒன்று, றைஸ்குக்கர் 20 ஆயிரம் ரூபா பணமும், செம்மண்ஓடை பிரதேசத்தில் வீடு ஒன்றின் கதவை உடைத்து காஸ்சிலிண்டர் ஒன்று, மணிக்கூடு, 20 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன.

நாவலடி பகுதியில் கையடக்க தொலைபேசியான அப்பிள் போன் ஒன்று சம்சோங் போன் ஒன்றும் 70 ஆயிரம் ரூபா பணமும் திருடிச் சென்ற நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞனை ஹரோயின் போதைப் பொருளுடன் கைது செய்ததுடன் திருடப்பட்ட பொருள்களை மீட்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மகளிர் அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளை வலுவூட்டும் செயலமர்வு இறக்காமத்தில்!





(நூருல் ஹுதா உமர்)

இலங்கையில் பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தனிக்கவும், சமூக ஒற்றுமையை மேம்படுத்தவும் பெண்களை அதிகராமளித்தல் எனும் கருப்பொருளின் கீழ் 'கிழக்கு திரிய பெண்கள் அபிவிருத்தி மன்றத்தினால்' தெரிவு செய்யப்பட்டு பெண்கள் அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளுக்கான ஒருநாள் வலுவூட்டல் செயலமர்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நலிவுற்ற மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் ஏற்படும் பாலின அடிப்படையிலான வன்முறைகள், அவற்றை குறைப்பதற்கான வழிமுறைகள், குடும்ப சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள், பெண்களுக்கான சட்ட ஆலோசனைகள், குடும்பவன்முறைகளினால் ஏற்படும் உளவியல் பிரச்சினைகளும் அவற்றுக்கான ஆலோசனைகளும் போன்ற தலைப்புக்களை உள்ளடக்கி இச் செயலமர்வு நடாத்தப்பட்டது.

இச்செயலமர்விற்கு வளவாளர்களாக நிறுவனத்தின் ஆலோசகர் சட்டத்தரணி ஏ.சாஜித் அஹமட், சட்டத்தரணி எல்.கலைவாசனா (சட்ட உதவிகள் ஆணைக்குழு), சமூக செயற்பாட்டாளர் ஐ.எல். ஹாசிம் சாலிஹ், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், செயற்திட்ட உத்தியோகத்தர் பி.எம். கலாமுடீன் (சட்ட உதவிகள் ஆணைக்குழு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு திரிய பெண்கள் அபிவிருத்தி மன்றம் நிறுவனத்தின் செயற்திட்ட முகாமையாளர் திருமதி சமந்தி அமுன உடகெதர, வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி. சமாலி, வெளிக்கள உதவியாளர் பூர்னிமா ஆகியோர் செயலமர்வை வழிப்படுத்தினர். இறக்காமம் பிரதேசசெயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் ஆர்.எஸ். றிம்ஸியா ஜஹான், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். சபறுள் ஹஸீனா உள்ளிட்டோர் கலந்துகொண்டு செயலமர்வை நெறியாள்கை செய்தனர்.

## லிட்ரோ.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிட்ரோ எரிவாயு கொள்கலனின் விலை 48 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 800 ரூபாவாக குறைந்துள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## நிஷாந்தவுக்க.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

அதில், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் தமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு எதிராக காரணம் காட்டுமாறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சருக்குத் தண்டனை வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

## தேசிய பேரவை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகியுள்ளார். இன்றைய நாடாளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனை அறிவித்தார்.

அவரது விலகலினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் ம.ராமேஷ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் தேசிய பேரவையில் உறுப்பினராக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார் எனவும் சபாநாயகர் கூறினார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன கடந்த செப்டெம்பர் 20 ஆம் திகதி தேசிய பேரவையை உருவாக்குவது தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். இந்தப் பிரேரணை எதிர்ப்பு இன்றி ஏகமனமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கடந்த செப்டெம்பர் 29 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தத் தேசிய பேரவையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

சகல நாடாளுமன்ற அமர்வு வாரத்திலும் வியாழக்கிழமைகளில் தேசிய பேரவையைக் கூட்டுவதற்கு முதலாவது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## சர்வதேசத்திடம்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாவிட்டால் சிங்களவர்கள் ஒரு திசையிலும், தமிழ் - முஸ்லிம் மக்கள் வேறொரு திசையிலும் பயணித்துக்கொண்டே இருப்பார்கள்.

இதனால்தான் நாளுக்கு நாள் பிரச்சினைகள் உருவாகின்றன; கருத்து மோதல்களும் ஏற்படுகின்றன.

இந்த நிலைமை மக்களுக்கும் அழகு அல்ல. நாட்டுக்கும் நன்மை அல்ல.

எனவே, எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் - என்றார்.

## முல்லைத்தீவில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழிலாளர்கள் அடங்கிய குழு ஒன்று போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. இதனால் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். இதையடுத்து அங்கு பதற்றம் நிலவுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டு தமக்கான தீர்வு கிடைக்கும் வரை முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள் இன்று மூன்றாவது நாளாகப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அவர்கள் கடற்றொழில் நீரியல் வளதிணைக்களத்தின் நுழைவாயிலுக்கு அருகில் கொட்டகை அமைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் அதிகாரிகளை மாற்றுமாறு கோரியும், சுருக்குவலை மற்றும் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தநிலையில், இன்று தமக்குத் தீர்வு கிடைக்கவில்லை எனத் தெரிவித்து ஆத்திரமடைந்து கடற்றொழிலாளர்கள் தமது படகுகள், வலைகளுக்குத் தீ வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஒரு மீன்பிடிப் படகு மற்றும் வலைகள் என்பன தீயில் முற்றாக எரிந்த நிலையில் மேலும் படகுகள் மீது தீ பரவாமல் பொலிஸார் தடுத்தனர்.

இதேவேளை, குறித்த கடற்றொழிலாளர்களுக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், சாலை பகுதிகளில் தென்பகுதியில் இருந்து வருகை தந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் சுமார் 300 பேரளவில் முல்லைத்தீவு பஸ் நிலையம் அருகே முற்பகல் 11 மணியளவில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதையடுத்து குறித்த கடற்றொழிலாளர்கள் மற்றும் ஏற்கனவே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற கடற்றொழிலாளர்கள் இடையே முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார், முல்லைத்தீவு கடற்கரை வீதியில் இலங்கை வங்கிக்கு முன்பாக ஒரு வீதித் தடையையும், தொடர் போராட்டத்தில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் மற்றைய போராட்டக் குழுவை நோக்கி வர முடியாத வகையில் இன்னுமொரு வீதித் தடையையும் ஏற்படுத்தினர்.

எனினும், தொடர் போராட்டத்தில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு எதிரான போராட்டக்காரர்கள் இலங்கை வங்கி முன்பாக பொலிஸார் அமைத்த வீதித்தடையை உடைத்து கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கிச் சென்று அங்கிருந்த போராட்டக்காரர்களைத் தாக்க முற்பட்டபோது பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலையும், நீர்த்தாரைப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் பதற்ற நிலவுகின்றது.

## ஜெனிவா.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை அரசின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் ஜெனிவா சென்றிருந்த நாம், நாட்டில் மீண்டுமொரு இருண்ட யுகம் ஏற்பட இடமளிக்கமாட்டோம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளோம். எமது நிலைப்பாட்டை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

'ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள்சபையில் இலங்கை குறித்த பிரேரணை நாளை வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் வாக்களிக்கத் தகுதியுள்ள 47 நாடுகளில் ஆக ஆறு நாடுகள் மாத்திரமே தமக்கு ஆதரவாக -பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் என்று இலங்கை அரசு அச்சம் கொண்டுள்ளது' எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் அமைச்சர் விஜயதாஸவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாக் கூட்டத் தொடரின் 51ஆவது அமர்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உரையாற்றும்போது இலங்கையின் தற்போதைய நிலைமையையும், அரசின் நிலைப்பாட்டையும் விலாவாரியாக எடுத்துரைத்துள்ளார்.

எனவே, இதைப் புரிந்துகொள்ளும் மனநிலை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் அதில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் இருக்கும் என்றே நாம் நம்புகின்றோம்.

இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஜெனிவாவில் எத்தனை தீர்மானங்களும் நிறைவேற்றப்படலாம். அதை அரசால் தடுக்க முடியாது. ஆனால், உள்ளகப் பொறிமுறையூடாகவே அரசு கருமங்களை முன்னெடுக்கும். சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கையில் ஒருபோதும் இடமேயில்லை - என்றார்.

## இலங்கை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

எனினும், இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை தாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அரசால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்ஷக்களின் தான்தோன்றித்தனமான சில முடிவுகளால் நாடு இன்று படுகுழியில் விழுந்துள்ளது.

ராஜபக்ஷக்களின் சகாவான ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டை மீட்டெடுக்க முடியாது. மக்கள் ஆணை மூலம் புதிய அரசை நிறுவினால்தான் நாட்டுக்கு விடிவு கிடைக்கும் - என்றார்.

## வெளிநாடுகளின்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அநாதையாகும் நிலையே ஏற்படும்.

- இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான 'சுதந்திர மக்கள் சபை'யின் முக்கியஸ்தரும் சட்டத்துறை பேராசிரியருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நான் இலங்கைப் பிரஜை என்ற ரீதியில் எமது நாட்டுக்கு ஆதரவாகவே இருப்பேன். இலங்கை மீதான சர்வதேசப் பொறிமுறையை ஒருபோதும் ஆதரிக்கமாட்டேன்.

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு உள்ளகப் பொறிமுறையூடாகவே தீர்வு காண வேண்டும்.

நான் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலங்களில் ஜெனிவா விவகாரங்களை நாட்டுக்கு ஆபத்து ஏற்படாதவாறும், நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படாதவாறும் சாதுரியமாகக் கையாண்டேன்.

ஆனால், தற்போது நிலைமை எல்லை மீறிப் போகின்றது போல் தெரிகின்றது. இந்த ஆட்சி நீடித்தால் ஜெனிவாவில் இலங்கைக்கு 6 நாடுகள் மட்டுமல்ல எந்தவொரு நாடும் ஆதரவு வழங்க முன்வராது. சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பின்றி இலங்கை அநாதையாகும் நிலையே ஏற்படும்.

எனவே, ஜனநாயக வழியில் இந்த ஆட்சியை நாம் கவிழ்த்தே தீர வேண்டும். நாட்டின் மீது பற்றுள்ள அனைவரும் இந்த நடவடிக்கைக்காக ஓரணியில் திரள வேண்டும் - என்றார்.

## வசந்த.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் நடக்கின்றதா? -இவ்வாறு அரசிடம் கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கேள்வியைத் தொடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வசந்த முதலிகே உள்ளிட்ட மூவர் சுமார் 48 நாட்களுக்கு அதிகமான காலம் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லை. வசந்த முதலிகே இரவு நேரத்தில் மல்வானை, கடவத்தை, கம்பஹா போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்.

எதற்காக இவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றார்? இறுதியில் அவரைச் சுட்டுக்கொலை செய்துவிட்டு, அவர் தப்பிச் செல்ல முயன்றார் என்ற குற்றத்தை முன்வைக்கும் முயற்சிகள் நடக்கின்றதா? மாணவர்கள் மனித உரிமைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பது ஒருபோதும் பயங்கரவாத நடவடிக்கை என்று அர்த்தப்படாது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு நடைபெறும் தருணத்தில், இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது இலங்கை மீது மேலும் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு அரசு உந்துதல் அளிக்கின்றது.

ஆளும்கட்சி, ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தவறியுள்ளது.

முட்டாள்தனமான அரசுக்கு எதிராகப் போராடும் மாணவர்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடுப்படுகின்றது. பயங்கரவாதிகளுக்குத் துணைபோக நாம் விரும்பவில்லை. தடுத்துவைக் கப்பட்டுள்ள வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது சாதாரண முறையில் அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் - என்றார். இதன்போது, உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

எதிர்க்கட்சித் தலைவரே, அரசியல்வாதிகளின் இல்லங்களுக்குத் தீ வைத்தவர்களுக்குத் தலைவராகச் செயற்பட்டார். பயங்கரவாதத்துக்குத் துணைபோக வில்லை என்று கூறிக்கொண்டு அவர்களே அராஜகம் செய்கின்றனர். தற்போது பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதைகளை ஊக்குவிக்கின்றனர் - என்றார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், பகிடிவதையை நாமும் எதிர்க்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அப்பாவிகளுக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டாம். அதனைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவைக் கொலை செய்தவர்களைக் கண்டுபிடியுங்கள் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.10.2022இல் வெளியிடப்பெற்றது.